## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.29/2024

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜுன் மாதம் 17 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நாரயணசாமி | மதம் | : இந்து |
| த/பெ | : ரெட்டி வெங்கடசாமி ரெட்டி | ஜாதி | : -- |
| வயது | : 50 | கிராமம் | : மேதினிபுரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**17.06.2025**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் 2ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கு சொத்திற்கான SLR தெலுங்கு பதிப்பு மற்றும் அதன் தமிழ் மொழிபெயர்ப்பு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(SLR வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்திற்கான SLR தெலுங்கு பதிப்பு மற்றும் அதன் தமிழ் மொழிபெயர்ப்பு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(SLR வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. 01.01.1940 முதல் 31.12.1974 வரையிலான வில்லங்க சான்று சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.309ல் என் பெயரிலும் என் அண்ணன் வேலாயுதம் பெயரில் உள்ள கூட்டு பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(கூட்டு பட்டா வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா

எண்.731ல் என் அண்ணன் வேலாயுதம் பெயரில் உள்ள கூட்டு பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(கூட்டு பட்டா வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.732ல் என் பெயரில் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. 06.02.2024ம் தேதியிட்ட என் பெயரில் உள்ள வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **(வரி ரசீது வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 18.07.2023ம் தேதியிட்டு வாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன். **(வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் 2 எண்ணம் தாக்கல் செய்கிறேன். **(அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் வா.சா.ஆ 9 வரிசை (2 எண்ணம்) ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)